முழுப்பதிப்புரிமையுடையது


அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (சாதாரண தர)ப் பரீட்சை - 2018

## 87 - தொடர்பாடலும் ஊடகக்கற்கையும்

## புள்ளி வழங்கும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

Download all Past Papers>  https://bookbeekid.com/resource/past-papers/

**கல்விப் பொது தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2018**

**87 - தொடர்பாடலும் ஊடகக்கற்கையும்**

## தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் I

**1 ஆம் வினாத்தாளின் 40 வினாக்கள்**

1 x 40 = 40 புள்ளிகள்

## தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் II

**1 ஆம் வினா கட்டாயமானது**

ஒவ்வொரு பிரிவுக்கும் 2 புள்ளிகள் விதம் பத்து வினாக்கள் — 2 x 10 = 20 புள்ளிகள்

**2 முதல் 7 ஆம் வினாக்கள்**

தெரிவு செய்யப்பட்ட 4 வினாக்களுக்கு — 4 x 10 = 40 புள்ளிகள்

மொத்தம் 100 புள்ளிகள்

**பகுதி வினாக்களுக்கான புள்ளிகள்**

(2 ஆம் வினாவில் இருந்து 7 ஆம் வினா வரை)

| | | |
|---|---|---|
| (i) - | பகுதி | 01 புள்ளிகள் |
| (ii) - | பகுதி | 02 புள்ளிகள் |
| (iii)- | பகுதி | 03 புள்ளிகள் |
| (iv)- | பகுதி | 04 புள்ளிகள் |
| | | 10 புள்ளிகள் |

| | | |
|---|---|---|
| **வினாத்தாள் I** | **மொத்தம்** | **40 புள்ளிகள்** |
| **வினாத்தாள் II** | **மொத்தம்** | **60 புள்ளிகள்** |
| | | **100 புள்ளிகள்** |



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

## க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2018

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, ஒப்பம் இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ........................................................................ ✓ △ $\frac{4}{5}$
........................................................................
........................................................................

(ii) ........................................................................ ✓ △ $\frac{3}{5}$
........................................................................
........................................................................

(iii) ........................................................................ ✓ △ $\frac{3}{5}$
........................................................................
........................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. புள்ளி வழங்கும் திட்டத்தின் படி சரியான தெரிவைத் துளைத்தாளில் அடையாளமிடவும். அவ்வாறு அடையாளமிடப்பட்ட இடத்தை வெட்டி நீக்கித் துளைத்தாளைத் தயாரிக்கவும். துளைத்தாளை விடைகளின் மீது சரியாக வைத்துக்கொள்ளக்கூடியதாகச் சுட்டெண் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான விடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான, பிழையான விடைகளை குறிப்பிடக்கூடியதாக ஒவ்வொரு வரிசைக்கும் இறுதியில் வெற்று நிரையொன்றை வெட்டி ஏற்படுத்திக் கொள்ளவும். **வெட்டிக்கொண்ட துளைத்தாளில் பிரதம பரீட்சகரிடம் கையொப்பம் பெற்று அங்கீகரித்துக் கொள்ளவும்.**

2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.

3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**கட்டமைப்பு கட்டுரை மற்றும் கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். **பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.**
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக **2 இலக்கங்களில் பதியவும்.** வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

ஒரு வினாப்பத்திரம் உள்ள பாடங்கள் தவிர ஏனைய் சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியான புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளிப்பட்டியலில் "வினாப்பத்திரம் I" என்ற நிரலில் **பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும்.** பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி "வினாப்பத்திரம் II" எனும் நிரலில் வினாப்பத்திரம் II இற்குரிய இறுதிப்புள்ளியை பதிய வேண்டும். 43 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து **எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.**

21 – சிங்களமொழியும் இலக்கியமும், 22 – தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய இரு பாடங்களும் வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளி புள்ளிப்பட்டியலில் "வினாப்பத்திரம் I" என்ற நிரலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். வினாப்பத்திரம் II, III இற்கான புள்ளிகளை தனி தனியான புள்ளித்தாளில் பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி "வினாப்பத்திரம் II, III" எனும் நிரல்களில் உரிய நிரலில் பதிதல் வேண்டும்.

**முக்கியக் குறிப்பு :**

**சகல சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய முழுப்புள்ளியானது முழுத்தானத்தில் வினாப்பத்திரம் I, II, மற்றும் III என்ற நிரலில் உரிய வகையில் பதிதல் வேண்டும். எந்தவிதமான காரணங்களிற்காகவும் வினாப்பத்திரத்தின் இறுதிப்புள்ளியானது தசம தானங்களில் பதியப்படலாகாது.**

ooo



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**87 T I, II**

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2018 දෙසැම්බර්**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2018 டிசெம்பர்**
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2018**

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය **I, II**
**தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் I, II**
Communication and Media Studies **I, II**

2018.12.07 / 0830 - 1140

පැය තුනයි
**மூன்று மணித்தியாலம்**
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
**மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்**
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் I

**கவனிக்க :**

(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**

(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** நகரிலுள்ள குறித்தவொரு கடையொன்றினைத் தேடிய கமல், அதன் பெயர்ப் பலகை வர்ணமிழந்திருந்ததனால் அதனைக் கண்டறிய முடியாதிருந்தார். இது எடுத்துக்காட்டாக அமைவது
(1) சூழல்சார் தடைக்கு (2) மொழிசார் தடைக்கு
(3) ஊடகத் தடைக்கு (4) தொழில்நுட்பத் தடைக்கு

**2.** அச்சுப்பதித்தல் கலை ஐரோப்பா முழுவதும் விரிவுபடக் காரணமாயிருந்தவர்
(1) ஜோஹன்ஸ் குட்டன்பேர்க் (2) வில்லியம் ஹக்ஸ்ரன்
(3) குக்லி எல்மோ மார்க்கோனி (4) ஜோன் லொகி பெயார்ட்

**3.** போல் டீ மெசனியரின் செய்தி பற்றிய சமன்பாட்டின்படி, ஒருவரது தனிப்பட்ட ஆதாயங்களும் ஆர்வமும் செய்தியொன்றில் நேரடியாகப் பாதிப்பது
(1) துல்லியத்தை (2) நடுநிலைத் தன்மையை
(3) தெளிவான தன்மையை (4) நம்பகத்தன்மையை

**4.** ஹரோல்ட் டீ லாஸ்வெல்லின் தொடர்பாடல் பற்றிய வரைவிலக்கணத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட மிகப் பிரதானமான அம்சம்
(1) குறிமுறைப்படுத்தல் (2) அனுபவக் களம்
(3) விளைவு அல்லது தாக்கம் (4) சந்தர்ப்பம்

**5.** உலக தொலைக்காட்சித் தினம் கொண்டாடப்படுவது
(1) பெப்ரவரி 13 இல் (2) செப்ரெம்பர் 07 இல்
(3) நவம்பர் 21 இல் (4) டிசெம்பர் 10 இல்

**6.** ஒரு எண்ணக்கருவானது படைப்பாக்கத் திறனுடனும் உயர்நிலை நேரடித்தன்மையுடனும் (liveliness) முன்வைக்கப்படக் கூடியதாக அமைவது
(1) செய்திப்பத்திரிகையில் (2) வானொலியில்
(3) தொலைக்காட்சியில் (4) சினிமாவில்


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

7. "ஒரு நாய் மனிதனொருவனைக் கடிக்கும்போது, அது செய்தியாக அமையாவிட்டாலும் மனிதன் நாயொன்றைக் கடித்தால் அது செய்தியாகின்றது." இந்தக் கூற்றினால் உணர்த்தப்பெறுவது
(1) சட்ட வழிமுறை
(2) ஊடக ஒழுக்கநெறி
(3) செய்திப் பெறுமதி
(4) படைப்பாக்க அறிக்கையிடலின் முக்கியத்துவம்

8. பின்வருவனவற்றுள் வலமிருந்து இடமாக எழுதப்படும் மொழி
(1) ஹிந்தி மொழி
(2) ஜப்பானிய மொழி
(3) அரபு மொழி
(4) கொரிய மொழி

9. செய்தியானது தலைகீழ் பிரமிட் வடிவில் வழங்கப்படும்போது, மிக முக்கியமான தகவல்
(1) ஆரம்பத்தில் காணப்படும்.
(2) கலைந்திருக்கக் காணப்பட முடியும்.
(3) இறுதிப் பகுதியில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.
(4) நடுப்பகுதியில் காணப்படும்.

10. இந்நாட்டின் எரிபொருள் விலைகள் அடிக்கடி தளம்பிச் செல்வது பற்றிய ஊடக அறிக்கையிடல்களில் அவதானிக்கப்படக்கூடிய முக்கிய அம்சம்
(1) மனிதநேயச் செய்தி அணுகுமுறை
(2) வன்செய்தி அணுகுமுறை
(3) மென்செய்தி அணுகுமுறை
(4) புலனாய்வுச் செய்தி அணுகுமுறை

11. செய்திப்பத்திரிகையொன்றில், ஆசிரியர் தலையங்கம்
(1) முதற் பக்கத்தில் முக்கிய செய்தியின் மேற்புறமாகக் காணப்படும்.
(2) செய்தி ஆசிரியரால் எழுதப்படும்.
(3) செய்திப்பத்திரிகையின் விருது வாக்கியத்தை ஒரு வகையில் தருவதாயிருக்கும்.
(4) நிறுவனத்தின் நோக்கினைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு ஆவணமாகக் காணப்படும்.

12. செய்திப்பத்திரிகையில் செய்தி அறிக்கையிடல் பற்றிய **பொருத்தமற்ற** கூற்று,
(1) தலைகீழ் பிரமிட் வடிவம் பயன்படுத்தப்படும்.
(2) முதற்பகுதி தலைமைச்செய்தி என அழைக்கப்படும்.
(3) நிகழ்வின் சுருக்கம் தலைமைச்செய்தியில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.
(4) முடிவுரையுடன் செய்தி நிறைவடையும்.

13. வானொலி நிகழ்ச்சியொன்றில், அதன் பல்வேறு பணிகளின் அடிப்படைப் பொறுப்புகளையும் தன்னகத்தே கொண்டிருப்பவர்
(1) தயாரிப்பாளர்
(2) தொகுப்பாளர்
(3) செம்மைப்படுத்துபவர்
(4) கலையகக் கட்டுப்பாட்டாளர்

14. தொலைக்காட்சி ஊடகத்தில், எழுத்துரு மற்றும் செம்மையாக்கம் அற்றிருப்பது ஒரு அடிப்படை அம்சமாகக் காணப்படுவது
(1) விவரண நிகழ்ச்சிகளில்
(2) சஞ்சிகை நிகழ்ச்சிகளில்
(3) மெய்மை நிகழ்ச்சிகளில்
(4) இசை நிகழ்ச்சிகளில்

15. வெகுசன ஊடகச் செயற்பாடுகளில் நேரடியற்ற வகையில் அரசாங்கத்தின் தலையீடு காணப்படும் ஒரு வழிமுறை
(1) அலைவரிசைகளுக்கு அனுமதிப் பத்திரம் வழங்குதல்
(2) தொலைக்காட்சி நெடுந்தொடர்களுக்கு வரி விதித்தல்
(3) ஊடகவியலாளர்களுக்கு விசேட வசதிகளை வழங்குதல்
(4) செய்திகள் மற்றும் ஏனைய தகவல்களைக் கட்டுப்படுத்துதல்

16. புகைப்படமொன்றில் பிரிதிறன் (resolution) எனப்படுவது,
(1) சதுர அங்குலத்தில் காணப்படும் பிக்ஸல் (pixel) களின் எண்ணிக்கை
(2) காட்சித்தள ஆழத்தைத் தெரிவுசெய்தல்
(3) உயர் மற்றும் தாழ் படல வேகம் (film speed)
(4) ஒளி வழங்கலுக்கான கால அளவு


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**17.** தொலைக்காட்சி அலைவரிசையொன்றுக்கு ஒவ்வொரு போயா தினத்திலும் ஒளிபரப்புவதற்கேற்ற வகையில், ஒரு தொலைக்காட்சி நாடகத் தொடரைத் தயாரிப்பதற்கான வாய்ப்பை உங்கள் பாடசாலையின் நாடக அலகு பெற்றிருக்கின்றது. இதற்கு மிகப் பொருத்தமான தொலைக்காட்சி நாடக வடிவம்

(1) ஓரங்க தொலைக்காட்சி நாடகம் (2) தொடர் நாடகம்
(3) மெகா தொடர் தொலைக்காட்சி நாடகம் (4) பல்வித அம்ச நாடகம்

**18.** ஊடக விமர்சனத்தில், செய்தி பற்றி மிக அதிகமாக அவசியம் கவனஞ்செலுத்தப்பட வேண்டிய அம்சம்

(1) ஊடகத்தை அணுகுவதற்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணத்தொகை
(2) செய்தியின் கவனயீர்ப்பு
(3) ஊடக நிறுவனத்தின் உரிமையாண்மை
(4) ஊடக நிறுவனத்தின் வரவு அறிக்கை

**19.** செய்திப்பத்திரிகை செம்மையாக்கல் பகுதிக்கான தலைமைப் பொறுப்பில் இருப்பவர்

(1) பிரதம ஆசிரியர் (2) பிரதி (Deputy) ஆசிரியர்
(3) உதவி ஆசிரியர் (4) சிறப்பம்ச ஆசிரியர்

**20.** இலங்கையில் ஒருவர் தன் வாழ்நாளிலும் அதற்கு பின்னருமாக பதிப்புரிமையைப் பெறும் ஆண்டுகளின் எண்ணிக்கை

(1) 25 ஆண்டுகள் வரையில் மாத்திரம்.
(2) 50 ஆண்டுகள் வரையில் மாத்திரம்.
(3) 75 ஆண்டுகள் வரையில் மாத்திரம்.
(4) 100 ஆண்டுகள் வரையில் மாத்திரம்.

**21.** சரவை பார்த்தல் அல்லது ஒப்பு நோக்குதல் என்பது

(1) வானொலி நிகழ்ச்சிக்கான ஒரு முற்தயாரிப்புச் செயற்பாடாகும்.
(2) செய்திப்பத்திரிகை அச்சிடலுடன் தொடர்புடைய ஒரு செம்மையாக்கற் செயற்பாடாகும்.
(3) கையெழுத்துப் பிரதியுடன் அச்சிடப்பட்ட பிரதியை ஒப்பிட்டு மேற்கொள்ளப்படும் ஒரு திருத்தமாகும்.
(4) ஊடக உள்ளடக்கத்தின் துல்லியத்தைப் பரிசோதித்தலாகும்.

**22.** வெகுசன ஊடக நிறுவனமொன்றின் அலுவலக ஊடகவியலாளர் தொடர்பிலான தவறான கூற்றைத் தெரிவுசெய்க. அவர்,

(1) ஒரு தொழில்சார் ஊடகவியலாளராகக் கருதப்படுகிறார்.
(2) ஊடக நிறுவனத்துடன் ஒரு ஒப்பந்தமொன்றினூடாக இணைக்கப்பட்டவராகிறார்.
(3) ஊடக நிறுவனத்தினால் வகைகுறிக்கப்படும் பணிகளைப் பூர்த்திசெய்பவர்.
(4) வேதனத்திற்கும் மேலதிகமாக சேவை வசதிகளைப் பெறுபவராயிருக்கிறார்.

**23.** செய்திப்பத்திரிகையொன்றின் இலத்திரனியல் பத்திரிகை (e-paper) அறிமுகப்படுத்தப்படுவது

(1) அச்சிடப்படும் அதே பத்திரிகையின் இலத்திரனியல் வடிவம் என்பதாக
(2) செய்திப்பத்திரிகையின் இணையத்தளம் என்பதாக
(3) செய்திப்பத்திரிகையின் பொழிப்பைக் கொண்டிருக்கும் பகுதி என்பதாக
(4) அச்சிடப்பட்ட வடிவத்திலும் அதிகமான தகவல்களை தரும் இணையப்பக்கம் என்பதாக

**24.** இந்நாட்டில் பேச்சு மற்றும் வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்கு அடிப்படையாகவுள்ள பிரதான சட்ட ஆவணம்

(1) புலமைச் சொத்துச் சட்டம் (2) அரசியலமைப்பு
(3) மனித உரிமைகள் பிரகடனம் (4) தண்டனைச் சட்டக் கோவை

**25.** தொடர்பாடல் செயன்முறையில், தொடர்பாடுபவரிடம் ஒப்படைக்கப்படும் பொறுப்பு மிக முக்கியமானதாக அமைவது, தகவல் பரவிச் செல்வதானது

(1) நிகழ்தகவுச் சங்கிலியாக அமையும்போதாகும்.
(2) கொத்தணிச் சங்கிலியாக அமையும்போதாகும்.
(3) தனிச் சங்கிலியாக அமையும்போதாகும்.
(4) சங்கிலி மாதிரியாக அமையும்போதாகும்.


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers

26. செய்திப்பத்திரிகையொன்றின் விற்பனை விலையானது அதன் தயாரிப்புச் செலவிலும் பார்க்கக் குறைவாக இருப்பது
(1) பத்திரிகை விற்பனையில் ஏற்படும் அதிகரிப்பினால் ஆகும்.
(2) பத்திரிகை விளம்பரங்களிலிருந்து பெறும் வருவாயினாலாகும்.
(3) பத்திரிகை அச்சிடலுக்காக அரசின் சலுகை கிடைக்கப்பெறுவதனாலாகும்.
(4) பத்திரிகை சந்தாதாரராவதன் எண்ணிக்கை அதிகரிப்பதனால் ஆகும்.

27. பின்னூட்டம் பற்றிய சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) பெறுபவரின் எதிர்வினை குறிமுறையாக்கம் செய்பவரைச் சென்றடையும் தேவை அவசியமற்றது.
(2) நேர்வழித் தொடர்பாடல் செயன்முறையில் அது வெளிப்படையாகத் தெரியும் ஒன்றாகும்.
(3) அது தகவல் பரிமாற்றத்தில் தொடர்பாடுபவரை மையப்படுத்திய ஒரு செயன்முறையாகும்.
(4) அது எழுத்து அல்லது வாய்மொழித் தொடர்பாடலுடன் மாத்திரம் வரையறுக்கப்பட்டதல்ல.

28. ஒன்றுக்கு ஒன்று வேறுபட்ட உள்ளடக்கங்கள் பலவற்றைக் கொண்ட வானொலி நிகழ்ச்சியொன்றை உருவாக்குவதற்கு மிகப் பொருத்தமான வடிவம்
(1) சித்தரிப்பு வடிவம்
(2) நேரடிக் காட்சி ஆவண வடிவம்
(3) அறிவிப்பு வடிவம்
(4) சஞ்சிகை நிகழ்ச்சி வடிவம்.

29. அருகிலுள்ள படம் உதாரணமாக அமைவது



(1) குறும்பார்வைத் தன்மைக்கு ஆகும்.
(2) புலக்காட்சியின் வேற்றுமைத் தன்மைக்கு ஆகும்.
(3) பார்வையின் தொடரறாத் தன்மைக்கு ஆகும்.
(4) காட்சி மாயத்தோற்றத்திற்கு ஆகும்.

30. உங்களது பாடசாலையின் நற்பெயரானது ஒரு செய்திப்பத்திரிகை அறிக்கையினால் களங்கப்படுத்தப்பட்டுள்ளதாகக் கற்பனை செய்துகொள்க. செய்திப்பத்திரிகை அறிக்கையின் திருத்தமொன்றை வேண்டி, உங்களால் முறைப்பாடொன்றை மேற்கொள்ளக்கூடிய அரச நிறுவனம்
(1) இலங்கைப் பத்திரிகைப் பேரவை
(2) அரசாங்கத் தகவல் திணைக்களம்
(3) இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
(4) வெகுசன ஊடக அமைச்சு

31. செய்திப்பத்திரிகையின் பிரதம ஆசிரியரின் ஒரு பணியாக அமைவது
(1) செய்திப்பத்திரிகையின் சகல செய்திக் கட்டுரைகளையும் செம்மையாக்கம் செய்தல்
(2) செய்திப்பத்திரிகை சம்பந்தப்பட்ட விடயங்களின் சட்டப் பொறுப்பைக் கொண்டிருத்தல்
(3) செய்திகளினதும் செய்திக் கட்டுரைகளினதும் தலையங்கங்களைத் தீர்மானித்தல்
(4) அனைத்துச் செயன்முறைகள் மீதும் கவனத்தை வைத்திருத்தல்.

32. கலைஞர் ஒருவரின் ஒழுக்க உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பான சட்ட ஆவணம்
(1) மனித உரிமைகள் தொடர்பான அனைத்துலகப் பிரகடனம்
(2) செய்திப்பத்திரிகை ஊடகவியலாளர்களுக்கான ஒழுக்கவிதிக் கோவை
(3) இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் தொழில்சார் ஒழுக்காற்றுக் கோவை
(4) புலமைச் சொத்துச் சட்டம்.

33. உங்களது வகுப்பறையில் பயன்படுத்தக்கூடிய எறிவை ஊடக உபகரணமொன்றின் சில இயல்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

A - அது சக்தி வாய்ந்த மின்குமிழ் ஒன்றை உள்ளகத்தே கொண்டுள்ளது
B - வர்ணப்படங்களை அது எறிவை செய்கிறது.
C - அது நேர்நிலை ஊடுகடத்திச் சட்டங்களைப் பயன்படுத்துகின்றது

மேற்குறித்த அனைத்து இயல்புகளையும் கொண்டுள்ள எறிவை உபகரணம்
(1) மேந்தலை எறிவை
(2) வழுக்கி எறிவை அல்லது பட எறிவை
(3) துரித எறிவை
(4) பல்லூடக எறிவை


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**34.** பின்வரும் செயற்பாடுகளுள் வாயிற்காப்பு எண்ணக்கருவுடன் மிக வேறுபட்டிருப்பது
(1) ஊடக நிறுவனத்தின் சமூகப் பொறுப்பைப் பூர்த்திசெய்தல்
(2) ஊடக நிறுவனத்தின் இலக்குகளை ஈட்டிக்கொள்ளுதல்
(3) தற்போதுள்ள சமூகச் சூழலுக்குப் பொருத்தமாயிருத்தல்
(4) தகவல் பெறும் உரிமையை வலுப்படுத்துதல்

**35.** ஊடகக் குவிவுடன் அல்லது இணைந்த ஊடகத்துடன் ஒத்திசையக்கூடிய கூற்றைத் தெரிவுசெய்க.
(1) வேறுபட்ட ஊடக நிலையங்கள் ஒரு வலைப்பின்னலை உருவாக்கும் ஒரு சந்தர்ப்பம்
(2) புவியியல் பரப்புகளை கடந்திருத்தல்
(3) எந்தவொரு இணையத்தளத்தினையும் இலகுவாக அணுகுதல்
(4) ஒன்றிணைக்கப்பட்ட வெகுசன ஊடகங்களை புதிய ஊடக அனுபவங்களில் பயன்படுத்துதல்

**36.** கீழே ஊடகங்களின் சில பண்புகள் தரப்பட்டுள்ளன.
A - துரிதம்
B - செலவு அதிகம்
C - இடைத்தொடர்பு
D - கால இடைவெளி
இந்தப் பண்புகளை பிரதிநிதித்துவம் செய்யும் ஊடக வரிசையாக அமைவது
(1) தொலைக்காட்சி, செய்திப்பத்திரிகை, வானொலி, புதிய ஊடகம்
(2) வானொலி, தொலைக்காட்சி, புதிய ஊடகம், செய்திப்பத்திரிகை
(3) செய்திப்பத்திரிகை, தொலைக்காட்சி, வானொலி, புதிய ஊடகம்
(4) வானொலி, தொலைக்காட்சி, செய்திப்பத்திரிகை, புதிய ஊடகம்

**37.** அரசாங்கத்திற்கும் வெகுசன ஊடகங்களுக்குமான தொடர்பிணைப்பினை ஜனநாயக முறைப்படி பிரதிபலிப்பது
(1) அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்குச் சார்பான ஊடகச் செய்திகளை உருவாக்கும்போது
(2) அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சித்து ஊடகச் செய்திகளை உருவாக்கும்போது
(3) ஊடகச் செயற்பாடுகளில் அரசாங்கத்தின் தலையீடு குறைவாகும்போது
(4) செய்தியாளர் மாநாடுகள் ஊடாக ஊடகங்களுக்குத் தகவல்களை வழங்கும்போது

**38.** டப்லொய்ட் செய்திப்பத்திரிகைகளுடன் தொடர்புடைய கூற்றைத் தெரிவு செய்க
(1) அவை அகலமான தாள்களுடன் கூடிய செய்திப்பத்திரிகைகளாகும்.
(2) தேசிய ரீதியிலான முக்கியமான தகவல்களை அவை கொண்டிருக்கும்.
(3) பரந்த தலைப்புகளுடனான தகவல்களை அவை கொண்டிருக்கும்.
(4) மென்செய்திகளுக்கு அவை அதிக முக்கியத்துவம் அளிக்கும்.

**39.** விமர்சனமிக்க பெறுநர் ஒருவர் கவனஞ்செலுத்த வேண்டிய அம்சங்கள் தொடர்பில் மாணவர்களால் முன்வைக்கப்பட்ட சில விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
A - செய்திகள் வலுவாயிருப்பதற்குத் தாக்கம் செலுத்திய காரணங்கள்
B - தொடர்பாடுபவரின் பின்னணி பற்றிய தகவல்கள்
C - செய்தியை முன்வைத்த காரணம்
D - சமூக - அரசியல் பின்னணி
மேற்குறித்தவற்றில்
(1) A யும் C யும் மாத்திரம் உண்மையானவை
(2) B யும் C யும் மாத்திரம் உண்மையானவை
(3) A, B, C மாத்திரம் உண்மையானவை
(4) A, B, C, D அனைத்தும் உண்மையானவை

**40.** தொலைக்காட்சி விளம்பரமொன்றில் நீங்கள் பார்த்திருந்த வாசனைத்திரவியமொன்று சில காலங்களுக்குப் பின்னர் பல்லங்காடி ஒன்றில் இருப்பதைக் கண்டு உங்களால் கொள்வனவு செய்யப்பட்டதாகக் கற்பனை செய்து கொள்க. அதற்குச் செல்வாக்கு செலுத்திய காரணமாக அமையக்கூடியது
(1) நபரொருவரின் உளநிலை மற்றும் இடைத்தொடர்பாடல்
(2) தனிப்பட்ட தீர்மானம் எடுக்கும் செயன்முறை
(3) தூண்டல் - துலங்கற் செயன்முறை
(4) தனிப்பட்ட நினைவாற்றல்

**


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

රහසායි
அந்தரங்கமானது

අ.පො.ස. (සා.පෙළ) විභාගය - 2018
க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2018

විෂයය අංකය / பாட இலக்கம்: 87

විෂයය / பாடம்: தொடர்பாடலும் ஊடகக் கல்வியும்

## I පත්‍රය - පිළිතුරු
## I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 4 | 21. | 3 | 31. | 2 |
| 02. | 2 | 12. | 4 | 22. | 2 | 32. | 4 |
| 03. | 2 | 13. | 1 | 23. | 1 | 33. | 2 |
| 04. | 3 | 14. | 3 | 24. | 2 | 34. | 4 |
| 05. | 3 | 15. | 3 | 25. | 4 | 35. | 4 |
| 06. | 2 | 16. | 1 | 26. | 2 | 36. | 2 |
| 07. | 3 | 17. | 4 | 27. | 4 | 37. | 4 |
| 08. | 3 | 18. | 3 | 28. | 4 | 38. | 4 |
| 09. | 1 | 19. | 3 | 29. | 3 | 39. | 4 |
| 10. | 2 | 20. | 3 | 30. | 1 | 40. | 3 |

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் } එක් පිළිතුරකට ලකුණු / ஒரு சரியான விடைக்கு **01** බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் **01 × 40 = 40**

---

පහත නිදසුනෙහි දැක්වෙන පරිදි බහුවරණ උත්තරපත්‍රයේ අවසාන තීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව / சரியான விடைகளின் தொகை: 25 / 40

I පත්‍රයේ මුළු ලකුණු / பத்திரம் I இன் மொத்தப்புள்ளி: 25 / 40



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

## புதிய பாடத்திட்டம்
## தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் II

1. "பாடசாலை சுவர்ச் செய்திப்பத்திரிகையை தயாரிக்கும்போது மொழி தொடர்பில் விசேட கவனம் செலுத்துவது அவசியம்" என, பாடசாலை ஊடகக் கழகத்தின் பொறுப்பாசிரியர், ஆசிரியர் பீடத்திடம் வலியுறுத்திக் கூறியிருந்தார். இது தொடர்பான கலந்துரையாடலொன்று ஆசிரியர் பீடத்தில் இடம்பெற்றிருந்தது.

(i) பேச்சுமொழியை விட எழுத்து மொழியை முறைசார்ந்ததாக உருவாக்கும் **இரண்டு** அம்சங்களைப் பெயரிடுக.

- இலக்கணத்தின்படி அமைந்திருக்கும்.
- அதில் கூட்டெழுத்து இருக்கும்.
- எழுத்துக்களுக்கு உறுப்பு வடிவம் இருக்கும்.
- வரிகளுக்கிடையே இடைவெளி சீராக இருக்கும்.
- எழுதும்போது சொற்கள் சம இடைவெளிவிட்டு எழுதப்பட்டிருக்கும்.
- ஒரு வாக்கியத்தை மற்ற வாக்கியத்தில் இருந்து பிரித்துக் காட்டும் போக்குக் காணப்படும்.
- ஒரு பந்தி மற்றைய பந்தியில் இருந்து வேறுபடுத்திக் காட்டப்படும்.

(2 × 1 = 2 புள்ளிகள்)

(ii) கட்டுரைகளை எழுதும்போது பயன்படுத்தக்கூடிய படைப்பாக்க மொழி வெளியீட்டு விதிகள் **இரண்டினைப்** பெயரிடுக.

1. உவமை
2. உருவகம்
3. விடுகதைகள்
4. பழமொழிகள்
5. முதுமொழிகள் / மூத்தோர் வாக்கு
6. இடக்கரடக்கல்
7. மரபுச்சொற்கள்

(2 × 1 = 2 புள்ளிகள்)

(iii) வினைத்திறன்மிக்க ஆவணங்களின் **இரண்டு** இயல்புகளைப் பெயரிடுக.

- எளிமை / இலகு மற்றும் சிக்கலற்றதாகவும், விளக்கமாகவும் இருத்தல்.
- பொருத்தமான வடிவம் அல்லது மாதிரியமைப்பைக் கொண்டு இருத்தல்.
- படைப்பாக்கத் தன்மை காணப்படல்.
- ஏற்றுக் கொள்ளப்பட்ட இலக்கண விதிகளின் பயன்பாடு இருத்தல்.

(2 × 1 = 2 புள்ளிகள்)

(iv) சுவர்ச் செய்திப்பத்திரிகையில் இணைக்கக்கூடிய புகைப்படங்களின் **இரண்டு** வகைகளைப் பெயரிடுக.

- செய்திப் புகைப்படங்கள்
- சிறப்புப் புகைப்படங்கள்
- விளம்பரப் புகைப்படங்கள்
- தனிப்பட்ட / தனிப்பட்ட நபர்களது புகைப்படங்கள்

(2 × 1 = 2 புள்ளிகள்)


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

(v) சுவர்ச் செய்திப்பத்திரிகையில் பயன்படுத்தக்கூடிய காட்சி வெளியீட்டு விதிகள் **இரண்டினைப்** பெயரிடுக.

- எழுத்து
- படம்
- சித்திரம்
- குறியீடு
- சமிக்ஞை
- அட்டவணை
- வரைபடம்
- புவியியல் வரைபடம்
- கேலிச்சித்திரம்
- எழுத்துரு வடிவங்கள்
- இலட்சினை ( Logo )
- வரையுருக்கள் / தகவல் வரையுருக்கள் ( Graphics / Info - Graphics )

(2 × 1 = 2 புள்ளிகள்)

(vi) தொலைக்காட்சி இசை நிகழ்ச்சி தொடர்பான கட்டுரையொன்று சுவர் செய்திப்பத்திரிகைக்கென கிடைக்கப்பெற்றிருந்தது. அதனுள் உள்ளடக்கக்கூடிய தொலைக்காட்சி நிகழ்ச்சி வகைகள்

- கலையகத் தயாரிப்பு
- நேரடி ஒளிபரப்பு
- வெளிவாரி அல்லது வெளிக்கள ஒளிப்பதிவு (2 × 1 = 2 புள்ளிகள்)

(vii) சுவர் செய்திப்பத்திரிகைக்கான செய்திகளை எழுதுவதற்குத் தகவல்களைப் பெற முடியுமான தனிநபர் மூலாதாரங்கள் **இரண்டினைப்** பெயரிடுக.

- அதிபர்
- ஆசிரியர்கள்
- பழைய மாணவர்கள்
- பெரியோர்கள்
- மதகுருமார்கள்
- நிபுணர்கள்
- பெற்றோர்கள்
- கிராம அதிகாரிகள்

(பாடசாலை சம்பந்தமான செய்திகளை வழங்கக் கூடிய பொருத்தமான தனிநபர் மூலாதாரங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் புள்ளிகள் வழங்குக.)

(2 × 1 = 2 புள்ளிகள்)


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

(viii) செய்திப்பத்திரிகைகளை தவிர அச்சு ஊடகத்தினைச் சார்ந்திருக்கும் வேறு **இரண்டு** வகைகளைப் பெயரிடுக.

- புத்தகங்கள்
- சஞ்சிகைகள்
- சுவரொட்டி
- துண்டுப்பிரசுரம்
- கையேடுகள்
- பதாதைகள்
- விளம்பரப் பதாதைகள்
- கட் அவுட்கள்
- செய்தி மடல்கள்

(2 × 1 = 2 புள்ளிகள்)

(ix) சுவர் செய்திப்பத்திரிகை குறிக்கப்பட்ட கால இடைவெளிகளில் இற்றைப்படுத்தப்படுவது அவசியமெனப் பரிந்துரைக்கப்பட்டது. கால இடைவெளிகளின் அடிப்படையில் செய்திப்பத்திரிகைகள் அச்சிடப்படும் **நான்கு** முறைகளைப் பெயரிடுக.

- நாளாந்தம் காலையில்
- நாளாந்தம் மாலையில்
- வார இறுதி
- வாராந்தம்
- இரு வாரம்
- மாதாந்தம் / காலாண்டு / அரையாண்டு
- வருடாந்தம் (2 × 1 = 2 புள்ளிகள்)

(x) சுவர் செய்திப்பத்திரிகை தொடர்பில் பெறுநர்கள் கலப்பு எதிர்வினைகளை வெளியிட்டிருந்தனர். பெறுநர்களின் **இரண்டு** முக்கிய வகைகளைப் பெயரிடுக.

- இயக்கமுள்ள / செயற்படுகின்ற பெறுநர்கள்
- இயக்கமற்ற / செயற்படாத பெறுநர்கள் (2 × 1 = 2 புள்ளிகள்)

**(மொத்தப்புள்ளிகள் 2 x 10 = 20 புள்ளிகள்)**


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**2.** பாடசாலை இலக்கிய விழாவில், 'மாணவரும் ஊடகப் பயன்பாடும்' தொடர்பில் பேச்சொன்றினை நிகழ்த்துமாறு நீங்கள் பணிக்கப்பட்டுள்ளீர்கள்.

(i) இந்தச் சந்தர்ப்பத்தில் பயன்படுத்தப்படும் தொடர்பாடல் வகைக்கு உரித்தான விசேட இயல்புகள் **இரண்டினை** எழுதுக.

**குழுத்தொடர்பாடல்**

- பங்குபற்றுகின்ற ஆட்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பொருள் வெளிப்படும்.
- குழு சிறிதாகவோ அல்லது பெரிதாகவோ இருக்கலாம்.
- தொடர்பாளன் தனக்கு முன்பாகப் பிரசன்னமாகியுள்ள குழுவுடன் அல்லது சமூகத்தினருடன் ஆற்றுகின்ற தொடர்பாடலாக அது அமையும்.
- பெரும்பாலும் ஒருவழித் தொடர்பாடல் ஆகும். தொடர்பாடுநரிடமிருந்து பெறுநருக்குத் தகவல் வழங்கப்படும். தொடர்பாடல் நிகழும் விதத்தைப் பொறுத்து பெறுநருடமிருந்து பின்னூட்டம் பெற்றுக்கொள்ளப்படும்.
- பெறுநர்கள் பல்வேறு தரப்பினராகவும் பல்வேறு மட்டங்களைச் சார்ந்தவர்களாகவும் காணப்படுவர்.
- வேறுபட்ட தந்திரோபாயங்கள் முன்வைப்பிற்குப் பயன்படுத்தப்படலாம்.

(1/2 × 2 = 1 புள்ளி)

(ii) மேற்குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் உங்கள் பேச்சின் வெற்றி அல்லது தோல்வியில் பாதிப்பினை ஏற்படுத்தவல்ல **இரண்டு** காரணிகளை விவரிக்குக.

- பங்குபற்றுவோரின் தனிப்பட்ட நோக்கங்களும், விருப்புகளும்
- பங்குபற்றுவோரின் கல்விப் பின்புலம்
- பங்குபற்றுவோரின் அனுபவங்கள்.
- தொடர்பாடல் நிகழும் நேரம், இடம், இருக்கை அமைப்பு, பௌதிகச் சூழல்.
- பேச்சாளனின் பேச்சுத் தொடர்பாடல் ஆற்றல்.
- பேச்சாளன் உரிய தலைப்புத் தொடர்பாக பொருத்தமாக முன்வைக்கின்ற விடயங்கள்.
- பேச்சாளனின் முன்வைப்புப் பாணி
- பேச்சாளன் பயன்படுத்தும் ஊடகத்துணைகள்
- பேச்சாளன் ஊடகக் கருவிகளை வினைத்திறனுடன் பயன்படுத்தும் ஆற்றல்.
- பேச்சாளனுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரத்தை முகாமைப்படுத்துதல்.
- பங்குபற்றுவோரின் துலங்கலை எடுத்துக்காட்ட வழங்கப்படும் சந்தர்ப்பங்கள்
- ஊடகங்களில் ஏற்படும் தடைகள் மற்றும் குழப்பங்கள்

(காரணிகளைக் குறிப்பிட்டு விபரித்திருந்தால் மாத்திரம் முழுப்புள்ளிகள் வழங்கவும்)

(2 × 1 = 2 புள்ளிகள்)

(iii) ஊடகங்கள் மூலம் பெறுநரிடத்தில் உருவாக்க இயலுமான மாற்றங்கள் **மூன்றினை** விவரிக்குக.

- பெறுநரின் நடத்தைகளில் மாற்றங்கள்
- தனியாட்களின் நிகழ்ச்சி நிரல்களில் ஏற்படக்கூடிய மாற்றங்கள்
- பெறுநரின் எண்ணங்கள், மனப்பாங்குகளில் உருவாகும் மாற்றங்கள்

(மேற்குறிப்பிடப்பட்டவற்றைக் குறிப்பிட்டு விளக்கியிருந்தால் மாத்திரமே முழுப் புள்ளிகள் வழங்கவும்)

(1 × 3 = 3 புள்ளிகள்)

(iv) ஒரு பாடசாலை மாணவன் விமர்சனமிக்க பெறுநராக இருப்பதற்கான முக்கியத்துவம் பற்றி நான்கு அம்சங்களைப் பயன்படுத்திக் கலந்துரையாடுக.

- வெகுசன ஊடகத்தின் வழியாக முன்வைக்கின்ற விடயங்களை சரியாக விளங்கிக் கொள்ளும் திறனைப் பெறுவர்.
- ஊடகத்தினூடாக மறைக்கப்படுபவை அல்லது புறமொதுக்கப்படுவது எவையென்பதை விளங்கிக் கொள்ளும் திறன் பெறுவர்.


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

- வெகுசன ஊடகங்கள் எத்தகைய குறிக்கோள்களுடன் செயற்படுகின்றன என்பதைப் புரிந்துக் கொள்ளும் திறன் பெறுவர்.
- வெகுசன ஊடகங்களினால் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் தன்னை எத்தகைய நபராக ஆக்குகின்றது என்பதை நன்கு விளங்கிக் கொள்ளும் ஆற்றல் பெறுவர்.
- பெறுநரைத் தூண்டுவதற்காக ஊடகங்களினால் மேற்கொள்ளப்படும் தந்திரோபாயங்களை விளங்கிக் கொள்ளும் ஆற்றல் பெறுவர்.
- ஊடகங்கள் எவ்வாறான தகவலை வழங்கிய போதும் தமக்குத் தேவையானவற்றை மாத்திரம் தேர்ந்தெடுத்துப் பெற்றுக் கொள்ளும் திறன் பெறுவர்.
- ஊடகச் செயற்பாடுகள் தொடர்பான தமது வெளிப்பாட்டினை தனிப்பட்ட ரீதியிலும், ஒழுங்கமைப்பு ரீதியாகவும் ஊடகங்களுக்கு முன்வைத்தலூடாக ஊடகங்களுடன் இடைத் தொடர்புகளை பேணுவதற்குரிய திறன் பெறுவர்.

(கலந்துரையாடப்பட்டிருந்தால் மாத்திரம் முழுப்புள்ளிகள் வழங்குக.) (1 × 4 = 4 புள்ளிகள்)

**3.** புதிய அறிமுக நிலை தொடர்பாடுநர்களை ஆட்சேர்ப்பதற்காக வானொலி ஊடக நிலையமொன்று தனது உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் அறிவித்தல் ஒன்றை வெளியிட்டிருந்தது.

(i) வானொலி ஊடகத்தின் வலுவான அம்சங்கள் **இரண்டினை** எழுதுக.

- அது ஓர் நேரடி ஊடகம்
- பேசுதலும், கேட்டலும் சம நேரத்தில் நிகழ்த்தப்படும் ஊடகம்
- நிகழ்ச்சியைப் புரிந்துகொள்ள விசேட திறமைகள் தேவையில்லை.
- அது புவியியல் வரையறைகளைக் கொண்டிருக்கவில்லை.
- குறைந்த செலவு கொண்ட ஊடகம்.
- இடம் நகர்த்தக்கூடிய ஊடகம். (1/2 × 2 = 1 புள்ளி)

(ii) வானொலி ஊடகத்திற்கான பிரதி எழுதும்போது கவனிக்கவேண்டிய **இரண்டு** அம்சங்களைச் சுருக்கமாக விளக்குக.

- இலகு மொழியைப் பயன்படுத்துதல்.
- கண்ணால் பார்ப்பதற்கு அல்லாது செவியால் கேட்பதற்கான மொழிப்பாவனை என்பதனைப் புரிந்துக்கொள்ளல்.
- வசனத்தை முடிக்கின்றபோது அது முடிவுறுவதை நேயர்கள் புரிந்து கொள்ள வேண்டும்/ அதற்குரிய பொருத்தமான ஒலிக்குறிப்புப் பாவனை இடம்பெற வேண்டும்.
- மொழியில் இடம்பெறுகின்ற வேற்றுமைகள் தெளிவாக விளங்கிக் கொள்ளப்பட வேண்டும்.
- இசைக்கருவிகள் பாவனை மற்றும் மௌனம் என்பவற்றை சரியாகப் பயன்படுத்துதல்.
- வாக்கிய நிறுத்தற் குறிகள் சரியாக தெளிவூட்டப்பட வேண்டும்.
- வேறுபடுத்தற் குறிகள் சரியான முறையில் பயன்படுத்துதல்.
- சுருக்கக் குறியீடுகளைப் பயன்படுத்தாது முழுமையாக எழுதுதல் வேண்டும்.
- இலக்கத்திலான தகவல்களை தெளிவாக இலகுவில் ஞாபகப்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் முன்வைக்க வேண்டும்.
- எழுதும் பகுதிகளுக்கு ஏற்ப அங்கம் பிரித்தெழுதுதல் சிறந்தது.
- தொழினுட்பப் பின்னணிக் குரல் பாவனையின் போது அவதானமாக நடந்து கொள்ளல்.
- தேவைக்கு அதிகமாகப் பிரதிகள் இணைப்பது சிறப்பானதல்ல.
- அமைதி மற்றும் இடைவேளைகளுக்கு முற்றுப்புள்ளிகள் அல்லது கோடுகள் பயன்படுத்துவது சிறப்பானதாகும்.
- சம்பவ மாற்றங்களுக்கு விசேட வெளிப்பாடுகளைப் பாவித்தல் சிறப்பானது.
- பிரதிகளில் தேவையான தொழினுட்ப அறிவுறுத்தல்கள் குறிப்பிடப்படுவது சிறப்பானதாகும்.
- பிரதிகள் எழுதும்போது உச்சரிப்பு விதி சரியாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

(1 × 2 = 2 புள்ளிகள்)


Download all Past Papers>- https://bookbeekid.com/resource/past-papers/

(iii) முற்பதிவு செய்யப்பட்டு ஒலிபரப்பக்கூடிய வானொலி நிகழ்ச்சிகளின் **மூன்று** வகைகளைப் பெயரிட்டு, அவற்றின் முக்கிய இயல்புகளை விவரிக்குக.

- வானொலி நாடகம்
- சஞ்சிகை நிகழ்ச்சிகள்
- சித்திரிப்பு நிகழ்ச்சிகள்
- விபரண நிகழ்ச்சிகள்
- இசை நிகழ்ச்சிகள்
- நேர்காணல் நிகழ்ச்சிகள்
- வினாவிடை நிகழ்ச்சிகள்
- கதை நிகழ்ச்சிகள்
- நேரடி வர்ணனை
- அறிவிப்பு
- தொலைபேசி உரையாடல்

(மூன்று வகைகளைப் பெயரிட்டு அவற்றின் முக்கிய இயல்புகளை விபரித்து இருப்பின் மாத்திரம் முழுப் புள்ளிகள் வழங்குக.) (1 × 3 = 3 புள்ளிகள்)

(iv) வானொலி நிலையமொன்று உத்தியோகபூர்வ இணையத்தளமொன்றைப் பேணுவதால் அதற்கு கிடைக்கக்கூடிய **நான்கு** அனுகூலங்களை விவரிக்குக.

- வானொலி நிலையம் பற்றிய தகவல்களை உலகில் எம் மூலையில் உள்ள ஒருவராலும் பார்வையிட முடியும். உலகில் எங்கிருந்தும் வானொலி நிகழ்ச்சிகளை செவிமடுக்கவும் முடியும்.
- தகவல்களை விரைவாக வழங்கலாம்.
- ஒலிபரப்பாகும் வானொலி நிகழ்ச்சிகளை களஞ்சியப்படுத்தக்கூடிய வாய்ப்பு
- அலுவலக விபரங்களையும் வானொலி நிகழ்ச்சிகள் பற்றிய பின்புலத் தகவல்களையும் சமூகத்தின் பார்வைக்கு ஒப்புவித்தல்.
- வானொலி அலுவலக நடவடிக்கைகள் நேர்த்தியாகவும் ஒழுங்கு முறையிலும் அமைக்கப்படக் கூடியதாக இருத்தல்.
- அலுவலகத் தகவல்களை விரைவாக வழங்கக் கூடியதாக இருத்தல்.
- இணையத் தளத்தின் மூலம் பெறுநரின் துலங்கல்களை உடனடியாகப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருத்தல்.

(அனுகூலங்களை விபரித்து இருப்பின் மாத்திரம் முழுப் புள்ளிகள் வழங்கவும்.)

(1 × 4 = 4 புள்ளிகள்)

**4.** "அனைத்துத் தகவல்களும் செய்திகளல்ல, ஆனால் அனைத்துச் செய்திகளும் தகவல்களாகும்."

(i) தகவல் என்றால் என்ன என்பதைச் சுருக்கமாக அறிமுகப்படுத்துக.

- தரவுகளை ஒழுங்கு முறைப்படுத்தி பெறப்படுவது தகவல் எனப்படும்.

**அல்லது**

- நிகழ்வொன்றை அவதானித்து அதனை இன்னொருவருக்கு தொடர்பாடல் செய்யப்படும்போது அது தகவல் எனலாம். (1/2 × 2 = 1 புள்ளி)

(ii) தகவல்களின் அனுகூலங்கள் **நான்கினை** குறிப்பிடுக.

- தனிநபர் மற்றும் சமூகத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு
- தீர்மானமெடுத்தலுக்கு
- தனிநபர் மற்றும் சமூகத் தொடர்பினைக் கட்டி எழுப்புவதற்கு
- கல்வி நடவடிக்கைகளுக்கு
- பிரச்சினை தீர்த்தலுக்கு
- ஆக்கபூர்வ சிந்தனைக்கு

(பொருத்தமான அனுகூலங்கள் குறிப்பிட்டிருந்தால் புள்ளிகள் வழங்குக.) (1/2 × 4 = 2 புள்ளிகள்)


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

(iii) தகவல் ஒன்றின் செய்திப்பெறுமதியை நிர்ணயிப்பதற்கு ஒரு ஊடகவியலாளர் கருத்திற்கொள்ள வேண்டிய **மூன்று** காரணிகளை விவரிக்குக.

- காலத்தோடு இயைந்திருத்தல் ( Timeliness )
- அண்மித்த தன்மை ( Proximity)
- தொடர்புபடுதல் ( Relevance )
- வெளிப்படையாக தெரிதல் ( Prominence )
- முரண்பாடுகள் ( Conflicts )
- மானுட விருப்பங்கள் ( Human Interest)
- தாக்கமும் முக்கியத்துவமும் ( Impact and Importance )
- அசாதாரண தன்மை ( Unusualness )

(மூன்று காரணிகளையும் குறிப்பிட்டு விபரித்து இருப்பின் மாத்திரம் முழுப் புள்ளிகள் வழங்குக.)

(1 × 3 = 3 புள்ளிகள்)

(iv) செய்திப்பத்திரிகையொன்றின் உள்ளடக்கத்திற்கு ஏற்றவகையில் தகவல்களை அறிக்கையிடும்போது ஒரு ஊடகவியலாளர் பயன்படுத்தக்கூடிய தகவல் வடிவங்கள் **நான்கினை** விரிவாகக் குறிப்பிடுக.

- செய்தி
- ஆசிரியர் தலையங்கம்
- சிறப்புக் கட்டுரைகள்
- கேலிச் சித்திரம்
- விடயக் கட்டுரைகள்
- புகைப்படக் கட்டுரைகள்
- ஆசிரியர் விளம்பரங்கள் ( Advertorials )
- நேர்காணல்

(மேற்கூறியவற்றில் நான்கினை விபரித்திருப்பின் மாத்திரம் முழுப் புள்ளிகள் வழங்குக. )

(1 × 4 = 4 புள்ளிகள்)

**5.** வேறுபட்ட ஊடகங்கள், அவற்றின் பண்பியல்புகள், ஊடகவியலாளர்களின் தகைமைகள் மற்றும் ஒவ்வொரு ஊடகத்தினதும் உள்ளடக்கம் போன்ற அம்சங்கள் இணைபிரியாதனவாகவுள்ளன.

(i) பிரதான இலத்திரனியல் ஊடக வகைகள் **இரண்டினைப்** பெயரிடுக.

- வானொலி
- தொலைக்காட்சி

(1/2 × 2 = 1 புள்ளி)

(ii) இலத்திரனியல் செய்திப்பத்திரிகைகளின் பொதுவான பண்புகள் **நான்கினை** அறிமுகம் செய்க.

- உடனடியாகச் செய்தியை தெரிந்து கொள்ளல்.
- களஞ்சியப்படுத்தக்கூடிய வசதி
- மீண்டும், மீண்டும் வாசிக்கும் வசதி
- தகவலுக்கேற்ப வகைப்படுத்தல் இடம்பெறுகிறது.
- காலம் சென்றும் பாவனை செய்ய முடியும்.
- உடனடியாகப் பாவனையாளரின் கருத்தாடல் இடம்பெறும்.
- புவியியல் எல்லைகளையும் கடந்தும் பாவனையாளர் தமது நுகர்விற்குப் பெறும் வாய்ப்பு.

(1 × 2 = 2 புள்ளிகள்)


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

(iii) வெகுசன ஊடகங்களுக்கான தகவல்களைச் சேகரிக்கும் நபரொருவருக்கு இருக்கவேண்டிய தகைமைகள் **மூன்றினைச்** சுருக்கமாக விளக்குக.

- செய்தியை இனங்காணல்
- தகவல் மூலாதாரங்கள் பற்றி அறிந்திருத்தல்.
- பொறுமையுடையவராயிருத்தல்.
- சிறந்த ஆய்வாளராயிருத்தல்.
- ஒழுக்கமுடமை
- நட்புறவுடன் பழகுதல்.
- நேர முகாமை.
- புத்திக்கூர்மை.
- பக்கச் சார்பின்மை.
- நிலையான உறுதித்தன்மை
- தந்திரோபாயத் தன்மை

(எவையேனும் மூன்றினை விளக்கி இருப்பின் மாத்திரம் முழுப் புள்ளிகள் வழங்கவும்)

(1 × 3 = 3 புள்ளிகள்)

(iv) நான்கு வகையான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் குறை நிறைகளை ஆராய்க.

- செய்திகள்
- அறிக்கை அல்லது விவரண நிகழ்ச்சிகள்
- சின்னத்திரை நாடகங்கள்
- இன, சமய நிகழ்ச்சிகள்
- கலந்துரையாடல் / விவாதங்கள்
- சஞ்சிகைசார் நிகழ்ச்சிகள்
- மெய்மை நிகழ்ச்சிகள்
- நேரடி ஒளிபரப்பு
- இசை நிகழ்ச்சிகள்

(நான்கு வகையான நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டு ஆராய்ந்து இருப்பின் மாத்திரம் முழுப் புள்ளிகள் வழங்கவும். )

(1 × 4 = 4 புள்ளிகள்)


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

6. உங்களது நண்பன் சுரேஷ், அரச அலுவலகமொன்றில் இளநிலை நிறைவேற்றதிகாரியாக நியமனம் பெற்றுள்ளார் எனக் கற்பனை செய்க.

(i) சுரேஷ் தனது அலுவலகப் பணிகளில் பங்கேற்கக்கூடிய ஆட்களிடைத் தொடர்பாடல் நிகழ்வு ஒன்றினையும் குழுத் தொடர்பாடல் நிகழ்வு ஒன்றினையும் குறிப்பிடுக.

**ஆட்களிடைத் தொடர்பாடல் நிகழ்வுகள்**

- சக பணியாளர்களுடனான உரையாடல்
- கடிதங்கள்
- தொலைநகல்
- தொலைபேசி
- மின்னஞ்சல்
- இணைய வழித் தொடர்பு (ஸ்கைப் போன்றன)
- சமூக ஊடகங்கள்

( அலுவலகச் சூழலில் இடம்பெறக்கூடிய பொருத்தமான ஆட்களிடைத் தொடர்பாடல் நிகழ்வுகள் குறிப்பிடப்பட்டிருப்பின் புள்ளிகள் வழங்கலாம்.)

**குழுத் தொடர்பாடல் நிகழ்வுகள்**

- மாநாடுகள்
- கலந்துரையாடல்கள்
- செயலமர்வுகள்
- தொலைதூர மாநாடுகள் ( Tele Conferenes )
- வீடியோ மாநாடுகள் (காணொளிக் காட்சி மாநாடுகள்)

( மேற்குறித்தவை தவிர அலுவலகச் சூழலில் இடம்பெறக்கூடிய பொருத்தமான தொழில்நுட்ப அனுசரணையுடன் கூடிய குழுத் தொடர்பாடல் நிகழ்வுகள் குறிப்பிடப்பட்டிருப்பின் புள்ளிகள் வழங்கலாம்.) (1/2 × 2 = 1 புள்ளி)

(ii) சுரேஷ் தனக்கென உத்தியோகபூர்வ பதவி முத்திரையொன்றைக் கொண்டிருப்பாராயின், அதனைப் பயன்படுத்துவது தொடர்பில் கவனத்திற்கொள்ளவேண்டிய நான்கு அம்சங்களை எழுதுக.

- தனது அலுவலக உத்தியோகபூர்வ பணிகளுக்கு மாத்திரம் அதனை பயன்படுத்துதல்.
- அப்பதவி முத்திரைக்குரிய குறித்த நபர் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட நபர் மாத்திரமே அதனைப் பயன்படுத்துதல்.
- குறித்த நபரின் கையெழுத்துடன் இணைத்து அப்பதவி முத்திரை பயன்படுத்தப்பட வேண்டும்.
- அம் முத்திரையை இடுவதன் மூலமே குறித்த ஆவணத்திற்கு உத்தியோகபூர்வ அந்தஸ்து வழங்கப்படுகின்றது.
- பதவி முத்திரை பாதுகாப்பான இடத்தில் பேணப்படல்.

(1/2 × 4 = 2 புள்ளிகள்)


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

(iii) தனது அலுவலகப் பணிகளுக்கென, உத்தியோகபூர்வ தொலைபேசியொன்றை சுரேஷ் பயன்படுத்த வேண்டுமெனின், அதன் பயன்பாட்டில் சுரேஷ் அவசியம் பின்பற்ற வேண்டிய ஒழுக்கநெறிகள் **மூன்றினை** விவரிக்குக.

- தொலைபேசி அழைப்பைப் பெற்றுக் கொள்பவர் இணைப்புக் கிடைத்ததும் தனது விபரங்களைக் கூற வேண்டும். அவ்வாறு இல்லை எனில், அழைப்பு எடுத்தவர் தனது விபரங்களை வெளிப்படுத்தலாம்.
- தொடர்பாடலில் ஈடுபடுபவர்களின் தனித்துவத்தை மற்றும் கௌரவத்தைப் பாதிக்காத வகையில் வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்ளப்பட வேண்டும்.
- கூற வேண்டிய விடயத்தைச் சுருக்கமாக கூறுதல் பொருத்தமானது.
- தான் கூற வேண்டிய விடயத்தைக் கேட்பவருக்குத் தெளிவாக விளங்கும் வகையில் முன்வைக்க வேண்டும்.
- தொலைபேசியில் இணைப்பை ஏற்படுத்துவதற்கு முன் உரையாடலின் அவசியத்தைக் கவனத்திற் கொண்டு அதற்கேற்ற வகையில் தன்னை தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.
- தொலைபேசி மூலம் தீர்வை எட்ட முடியாத விடயங்களுக்கு தொலைபேசியை உபயோகப்படுத்தக் கூடாது.
- தனக்குத் தொடர்பில்லாத இணைப்பு ஏற்படும் போது உடனடியாக அதனைக் கௌரவமான முறையில் துண்டித்துவிடுதல்.
- தனது தனிப்பட்ட உத்தியோகப்பற்றற்ற தேவைகளுக்கு அலுவலகத் தொலைபேசியைப் பயன்படுத்தாதிருத்தல்.
- தொலைபேசியை தன்னுடைய தனிப்பட்ட வாழ்க்கைக்கு இடையூறுகள் ஏற்படா வண்ணம் பயன்படுத்த முனைய வேண்டும்.
- தொலைபேசிப் பாவனையானது பணத்துடன் தொடர்புடைய ஒரு விடயம் என்பதனை அறிதல்.
- தனக்கு அறிமுகமல்லாத இடையூறு விளைவிக்கும் இணைப்புடன் தொடர்பு கொள்வதைத் தவிர்த்தல்.
- தொலைபேசி அழைப்பிற்குத் தாமதிக்காது துரிதமாகப் பதிலளித்தல்.

(எவையேனும் மூன்றினை விபரித்து இருப்பின் மாத்திரம் முழுப் புள்ளிகள் வழங்கவும்)

(1 × 3 = 3 புள்ளிகள்)

(iv) அலுவலக ஆவணங்களைத் தயாரிப்பதற்கு கணினி வெளியீட்டுச் செயலொழுங்கினை சுரேஷ் பயன்படுத்துவாராக இருந்தால், அது கொண்டிருக்கக்கூடிய அனுகூலங்கள் **நான்கினை** விளக்குக.

- கவர்ச்சியானது
- துரிதத்தன்மை
- ஒப்பீட்டளவில் செலவு குறைவு
- இலகுவானது
- வினைத்திறன் மிக்கது
- நம்பகத்தன்மை

(எவையேனும் நான்கினைக் குறிப்பிட்டு விபரித்து இருப்பின் மாத்திரம் முழுப் புள்ளிகள் வழங்கவும் )

(1 × 4 = 4 புள்ளிகள்)


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

7. (i) இலங்கை அரசினால் உரிமையாண்மைப்படுத்தப்பட்டுள்ள இலத்திரனியல் ஊடக நிறுவனங்கள் **இரண்டினைப்** பெயரிடுக.

- இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்
- இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

(1/2 × 2 = 1 புள்ளி)

(ii) வெகுசன ஊடகங்களுக்கான பின்னூட்டத்தை வழங்குவதற்குப் பயன்படுத்தக்கூடிய **நான்கு** வழிமுறைகளைப் பெயரிடுக.

- கடிதங்கள் / அஞ்சலட்டைகள்
- தொலைபேசி அழைப்பு
- மின்னஞ்சல்
- குறுஞ்செய்திகள்
- சமூக ஊடகங்கள் / இணையத்தளங்கள்
- செய்தித் தாள்களுக்குக் கடித ஆக்கங்கள் வரைதல்.
- கட்டுரையாக எழுதித் துலங்கல்களைக் காட்டுதல்
- நடைபவனி அல்லது ஆர்ப்பாட்டம் ஒழுங்கு செய்தல்.

(1/2 × 4 = 2 புள்ளிகள்)

(iii) செவிப்புல - கட்புல ஊடகங்களில் புகைப்படங்கள் பயன்படக்கூடிய முறைகள் **மூன்றினை** விளக்குக.

- படப்பிடிப்பு நடைபெறும் போது பாத்திரங்களினதும், காட்சிகளினது தோற்றங்கள் ஆடையணிகள், பின்னணி பற்றிய தொடர்ச்சியினைப் பேணுவதற்கு
- சினிமா தொடர்பான விளம்பரங்கள், பிரசுரங்கள், பதாகைகள், பட அட்டைகள் போன்ற பரப்புரைப் பணிகளுக்காக
- சினிமாத் தொழிலில் ஈடுபடும் கலைஞர்களின் தரவுகள், தகவல்களைச் சேகரிப்பதற்கு, ஜனரஞ்சகத் தன்மையை கட்டியெழுப்புவதற்கு, தனிப்பட்ட நினைவேடுகளுக்காக
- சினிமா விமர்சனம், நினைவு மலர்கள், சஞ்சிகைகள், புத்தகங்கள், சினிமா இலக்கிய வெளியீடுகளில் உட்படுத்துவதற்கு
- சினிமா தொடர்பான கற்கைகளின்போது உபயோகப்படுத்திக் கொள்வதற்கு
- சினிமா படைப்புக்கள் பற்றி அச்சு ஊடகங்களில் வெளிவரும் விளம்பரங்களிலும் மற்றும் விசேட தேவைகளின்போதும் பயன்படுத்திக் கொள்வதற்கு.
- குறித்த நிகழ்வுகள், இடங்கள், ஆட்கள் பற்றிய ஒளிப்பதிவுகள் இல்லாத பட்சத்தில் குறித்த இடங்களில் புகைப்படங்களைப் பயன்படுத்துதல்.

(எவையேனும் மூன்றினை விபரித்து இருப்பின் மாத்திரம் முழுப் புள்ளிகள் வழங்கவும்)

(1 × 3 = 3 புள்ளிகள்)



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

(iv) செய்திப்பத்திரிகை உரிமையாண்மையின் **நான்கு** வகைகள் தொடர்பாக விவரிக்குக.

- ஆசிரியர் உரிமைத்துவ செய்திப் பத்திரிகைகள்
- பொதுசன அமைப்புகளுக்குச் சொந்தமான செய்திப் பத்திரிகைகள்
- தனிப்பட்ட வர்த்தகர்களுக்குச் சொந்தமான செய்திப் பத்திரிகைகள்
- அரசியல் கட்சிகளுக்குரித்தான செய்திப் பத்திரிகைகள்
- அரசுக்குச் சொந்தமான செய்திப் பத்திரிகைகள்

(நான்கு உரிமையாண்மைகளை குறிப்பிட்டு விபரித்திருப்பின் மாத்திரம் முழு புள்ளிகள் வழங்குக )

(1 × 4 = 4 புள்ளிகள்)


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

Download all Past Papers>  https://bookbeekid.com/resource/past-papers/